பாசீசப் பிடியில் பண்டிதர்!

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (27—9—49) வெளியூர் (28—9—49) [இதழ் 49

கருத்து வளர்ச்சி மனிதப் பண்பாகும்

அதிகாரம் ஒரு ஆபத்தான ஆயுதம்

———(0)———

மக்கள் சக்தியால்தான் பாசீச நோய் மடிந்து மறையும்!

"ரூபாயின் டாலர் மதிப்பு சம்பந்தமாக நாமும் பிரிட்டன் போன்று நடவடிக்கை எடுத்துள்ளோம். நாம் அப்படிச் செய்ததேன்? நம் டாலர் சங்கடங்களோ அல்லது எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்ட நெருக்கடிகளோ அல்லது பிரிட்டிஷ் சர்க்காரின் நிர்ப்பந்தமோ அதற்குக் காரணம் அல்ல. அவர்கள் எந்த நடைமுறையையும் பின்பற்றுமாறு ஆலோசனை அளிக்கவில்லை."

"நாணய பரிவர்த்தனை விஷயத்தில் நமக்கு முழு சுயேச்சையுண்டு. நாம் இப்போது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுத்துக்கொள்ள கட்டுப்பாடு எதுவும் கிடையாது. நாம் சுயேச்சையாகவே அதை மேற்கொண்டோம். ஆனால் ஒரு விஷயத்தைத் தோக்கெடுப்பது, இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்ததாகும்."

"நம் ரூபாயின் மதிப்பைக் குறைத்துவிட்டதைக் குறித்து எல்லாவிதமான கருத்துரைகளும் கூறப்பட்டுவிட்டன."

"ஏதோ உலகம், அந்த அபிப்பிராயங்களை எல்லாம் அறிந்துகொள்ள வேட்கை கொண்டிருந்ததுபோலக் கருதிக்கொண்டு, இத்துறையில் சிலர் தங்கள் ஆலோசனைகளைக் கூறியிருப்பதாகத் தெரிகிறது." ("It seemed that some people desired to give their advice on such matters, as if the world was '**thirsting for it**.'")

"எப்படி இருந்தாலும், பலவிதக் கருத்துக்களைத் தெரிந்துகொள்வது நல்லதுதான்." —ஜவஹர்—

* * *

"நான்தான் அரசு!" —14-வது லூயி மன்னன்—

"கடவுளால் ஆகும் என்பதை மறுப்பது தூய்மையற்றதும் நாத்திகமானதும் போல, அரசன் இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்யக்கூடாது என்று ஒரு அரசனின் செய்கையை மறுத்துரைப்பது, ஒரு பிரஜையின் ஆணவத்தையும் அகூயைக் குணத்தையும் காட்டக்கூடியதாகும்." — 1-வது ஜேம்ஸ் அரசன் —

"வரவர எதிர்த்துப்பேச ஆரம்பிச்சுட்டயே! உனக்கு ஏது அந்த உரிமை? அடிப்படி மேய காத்துக்கிட்டுக் கிடக்கிற மூதேவி, ஆம்பளைக்கு புத்தி சொல்ல வந்துட்டயோ? கன்னம் புளிச்சுப் போவுண்டி புளிச்சிப் போவும்!"

* * *

"பார்த்தீர்களா! பயல்களா! பிரம்பின்னாட்ட சாட்டத்தைப் பாருங்கள்! கூச்சல் போட்டன்னோ, கண்டுகண்டா விக்கிடுண்டா உடம்பு, 'சொல்லிக் கொடுத்த பாடத்தைப் படியுங்கடா' ன்னு, பாற்கடல் எங்கே இருக்கிறது? பாம்பைப் படுக்கையாக உபயோகப் படுத்த முடியுமா? உலகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிற ஆதிசேஷனையா தாங்கிக்கொண்டு இருக்கிறது?" என்றெல்லாம் வம்பளக்கிங்களோ, தோலை உறிச்சி உப்பைத் தடவிடுவண்டா! ஜாக்கிரதையா நடந்து கொள்ளுங்க!"

* * *

ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பைக் குறைத்துக் கொண்டதற்கேற்ப, இந்தியத் துணைக் கண்டமும் தனது ரூபாயின் மதிப்பைக் குறைத்துக் கொண்டது. அதைக்குறித்து, 'அவசர முடிவு இது—ஆகாது நாட்டுக்கு' என்று ஆராய்ச்சி உரை [illegible] பவர். 'உன் நாட்டில் பொருட்களின் விலை, இதனால் விஷம்போல் ஏறிவிடும்' என்று. 'இதனால் பொருட்களின் விலை ஏற நியாயமில்லை' என்ற பண்டிதரின் வார்த்தைகளை மறுத்துரைத்தனர் பலர். ஜவஹரின் பேச்சைப் பொய்யாக்க வருகிறது, நாட்டில் பொருட்களின் தடுமாற்ற விலை ஏற்றம். காங்கிரஸ் தலைவர் பட்டாபியும், குதிரைச் சவுக்குக்கொண்டு விளாச வேண்டும், விலையேற்றி விற்கும் வியாபாரிகளை என்று கர்ஜனை புரிகிறார்.

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது சோம்மையானதுதானா இன்றியமையாததுதானா என்பதல்ல முக்கியம். பலதிறப்பட்ட கருத்துக்கள் உலாவுவது அவசியமா இல்லையா என்பதுதான் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம். மக்களாட்சி முறை தெரிந்தோர்—மக்களாட்சிக் கோட்பாடுகளுடன் ஆட்சி நடைபெறும் நாடுகளின் வரலாறு அறிந்தவர்கள்—அந்த நாடுகளில் ஆட்சிப் பொறுப்பில் பயிற்சி பெற்றுள்ளோர்,—ஆள்வந்தார்களின் எந்த ஒரு நடவடிக்கைக்கும், பல்வேறு கருத்துக்கள் இன்பமுடைமை வரவேற்கவே

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

திராவிடம் என்றால் தீப்பொறி பறக்கிறது!

ஆரியம் என்றால் அகமகிழ்ச்சி பிறக்கிறது!

இதில் உள்ள இரகசியம்தான் என்ன?

அந்த வார்த்தையிலே, அவர்களுக்கு என்ன ஆனந்தம்! அந்தச் சொல்லை உச்சரிப்பதிலேயே அவர்களுக்கு எவ்வளவு பிரியம்! அந்த வார்த்தையைப் பிறர் சொல்லக் கேட்டாலே, அவர்கள் எந்த அளவிற்கு முகமலர்ச்சி கொள்கிறார்கள் பார்த்தீர்களா?

ஆம்! அந்தவார்த்தை, அந்த வார்த்தையைச் சூட்டிக்கொண்டு எழுந்த சமாஜம், அது ஆற்றிவந்த—வரும் பணி, அந்த வார்த்தையில் மறைந்துகிடக்கும் பண்பாடு, அவ்வளவும், இந்த நாட்டை நாசத்திற்குள்ளாகிவிட்டன என்பதற்கு, எவரும் மறுத்துக்கூறமுடியாத சில பல தக்கசான்றுகள் பல உள்ளன.

மானம் சிறிது உயிர் பெரிதென்னும் கோட்பாடு அந்தச் சொல்லின் மூச்சு. மக்களில் பலரை இழிவுபடுத்தியும், அவர்கள் உழைப்பில் பலரை சிறப்பித்து வாழ்வித்தும் வருவது, அச்சொல்லின் இலட்சியம். அதற்கு ஆதரவு அந்த இடத்தில்! நாசக் கருத்துக்கு தூபதீப நெய்வேத்தியம் போடும் தீச்செயல் புரிகிறார்கள்—உண்மை உணர்ந்திருந்தும்—அவர்கள்!

இருதேசீய சமுதாயம் என்ற கோட்பாடு கருக்கொண்டதற்கும்—நாளாகவாக வளர்ந்து வந்ததற்கும்—இத்துணைக் கண்டம் இரண்டானதற்கும்— இருந்து வந்த பல காரணங்களிலே, இந்த ஆரிய சமாஜத்தின் நடவடிக்கையும் ஒன்றாகும். அதற்கு ஆதரவு அளித்தார்கள் மறைமுகமாக அன்று. அதன் பலனாக, பல இஸ்லாமிய விடுதலை வீரர்கள், தியாகம் பல புரிந்த நெஞ்சுரம் கொண்டவர்கள், பின்னர், பாகிஸ்தான் படை வரிசையில் பங்கு பெறும் மனமாற்றம் பெற்றனர். வரலாறு இது. இப் படிப்பினையை மறந்துவிட்டனர் காங்கிரசார். ஆரிய சமாஜிகளுக்கு, காங்கிரசை, புகலிடமாக்கும் பணியைமேற் கொள்கிறார் டாக்டர் பட்டாபி! கிறுக.

'மானம் பெரிது உயிர் சிறிது' — 'மக்கள் அனைவரும் சமம்' — 'ஆண் பெண் பேதம் பாராட்டுவது அறிவின்மை' என்னும் அரும் பெரும் கொள்கைகளைக்கொண்ட, எதற்கும் மக்களை மதிக்கும் முறையைக் கொண்ட, நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் கரும்பென இனிக்கும் திராவிடக் கோட்பாட்டை, பட்டாபி போன்றோர்கள் கேட்கும் நிலைமையற்றுவிட்டால், வாளி பாய்ந்த மருண்ட விழியாக மாறிவிடுகிறார்கள். அங்கமெல்லாம் பற்றி எரிகிறது 'திராவிடம்' என்ற சொல் இவர்களுக்கு! எந்தவகையிலேனும் திராவிடக் கோட்பாடுகளைக் குலைக்கும் தீவினையாற்றத் துடிதுடிக்கிறார்கள். இதில் என்னத்தான் இரகசியம் அடங்கி இருக்கிறதோ? வேம்பை விரும்பும் காகம் போலவே, இவர்கள், இன்னும் இருக்கக் கருதுகிறார்கள்! திராவிடமே — என் திருநாடே, இவர்கள் தீய உள்ளத்தை என்றுதான் நீ ஐயமற உணரப் போகிறாயோ!

யாதும் ஊரே யாவரும் கேளிர்

———(0)———

புறநானூற்றுப் புலவர் கூறுவதல்ல

பிரதமர் நேரு கூறுகிறார்

இந்தியாவின் முதலமைச்சர் காஷ்மீரத் தலைநகரமம் ஸ்ரீ நகரில் அமர்ந்து, பல்கலைக்கழக மாணவர்களிடையே, பேசுகையில், ஒரே உலக அமைப்புப் பற்றிக் கூறினார். உலக நாடுகளின் மக்களனைவரும் ஒன்றுபட்டு, சமத்துவமாக வாழும் வழியை இந்தியாவுக்கும் என்றார். உலக நடவடிக்கைகளில் இந்தியா தலையாய பங்குகொள்ளும் என்றார்.

உலக வாழ்வின் இன்ப துன்பச் சுவையறியா மாணவர்களிடையே, முதலமைச்சர் நேரு ஒரே உலகத் தத்துவம் குறித்து மிக மிக அழகாகத்தான் பேசினார். அங்கிருந்த மாணவர்கள், இலட்சியச் சுவையை ஒன்றிலேயே, இலயித்திருந்தவர்களாதலின், நேருவின் பேச்சை ஓர் இலக்கியமாகச் சுவைத்திருப்பார்கள். நாட்டு நடப்பறிந்த சிலர் அதைக் [illegible] கேட்டு, வியப்புற்று வருந்தியிருக்கும்? ஏன்? கூரை மீதேறிக் கோழியைப் பிடித்துவரத் தெரியாதவன் கோபுரத்திலேறிப் பதுமையைக்கொண்டு வருவதெப்படி? என்றானாம் ஒருத்தி. அதுபோல, நம் நாட்டிலே இருக்கும் சமத்துவமின்மையைப் போக்கத் தெரியாதவர்கள், இங்கே மக்களிடையே உண்டாக்கப்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி, சாண்டல் திட்டங்களைப் போக்கி, இந்திய மக்களை ஒற்றுமையுடையவர்களாகவும் சமத்துவ முடையவர்களாகவும் ஆக்கவகை வகையறியாத இந்தியா, உலகமக்களை ஒன்றுபடுத்தி சமத்துவத்தில்கொணரும் பணியை ஏற்கப்போகிறதென்றால், இலந்தை [illegible] கருதிக்கைச்சாமல் அறிவு படைத்தவர் [illegible] என்றுதான் கருதுவர்!

மடாதிபதிகளுக்குப் போதனை

சாக்கைத் தமிழ்ச்சங்க விழாவில் தலைமை வகித்த தஞ்சைக் கலெக்டர், "மடாதிபதிகள், சமயப்பிரசாரத்தோடு நின்று விடாமல், கல்விச்சாலைகள், தொழிற்சாலைகள், மருத்துவச்சாலைகள் திக்கற்றவர் இல்லங்கள் முதலியவை ஏற்படுத்துவதில் முனைய வேண்டும்" என்று அறிவுறுத்தினர். மடாதிபதிகள் மதத்தைக் காக்கப்புறப்பட்டு, இன்னும் புதிய புதிய கோவில்கள், புதிய புதிய கும்பாபிஷேகங்கள், செய்வதில் புகுந்திருக்கின்றனரே ஒழிய, மக்களுக்குப்பயன் தரும் வேலையில் எங்கே ஈடுபடுகிறார்கள்? மறு உலகத்தில் மக்கள் நல்வாழ்வு வாழ ஆத்மீக உயர்வு பெற — அவற்றைப் பெற்றுவிட்டதாகக் கருதிக்கொண்டு, இந்த உலகச் வாழ்வு நடத்தும் மடாதிபதிகள் வேலை செய்கின்றனர். தஞ்சைக் கலெக்டரின் போதனை, இவ்வுலகை முற்றுந் துறந்ததாகக் காவியுடை மூலம் வெளியிற் காட்டி, உள்ளே அவ்வுலகை வெறுத்து இவ்வுலக சுகபோகங்களில் திளைத்துக் கிடக்கும் மடாதிபதிகளுக்கு அறிவு [illegible] தாமா?

மாலை மணி

சென்னை 27—9—49 செவ்வாய்க்கிழமை

என்ன செய்வது!

"இந்திய சர்க்கார் பதில் ஏற்பாடு எதுவுமின்றி, பாக்கிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய பச்சைத் தோல் இறக்குமதி அளவைக் குறைக்கத் தீர்மானித்தால், தென்னிந்தியாவில் பல டானரிகளை (தோல் பதனிடும் தொழிற்சாலைகளை) மூடவேண்டியிருக்கும்"

என்ற கருத்தை, டில்லி அரசாங்கத்தைக்கண்டு பேசும் பொருட்டு, டில்லிக்குப் பிரயாணமாகும் இந்திய தோல வியாபாரிகள் சம்மேளனக் காரியதரிசியான தோழர் ஏ. பார்த்தசாரதி வெளியிட்டுள்ளார்.

* * *

"பாக்கிஸ்தானுக்காக ஏராளமாக நூல் பேல்களை வாங்கிய கல்கத்தா வியாபாரிகள், சமீப செலாவணி மாறுதல் சம்பந்தமாக அங்கு அனுப்ப விரும்பவில்லை. இங்கு நெசவுத் தொழிலில் நெருக்கடியையும், மில்கள் மூடும்படியான நிலைமை ஏற்படுவதையும் தடுக்க, பாக்கிஸ்தானுடன் வியாபார வசதிகள் அவசியம் ஏற்படவேண்டும்".

என்று தென் இந்திய மில் சொந்தக்காரர்கள் சங்கம், இந்திய அரசாங்க சபை மந்திரி டாக்டர் சியாமபிரஸாத் முகர்ஜிக்கு தந்திமூலம் தெரிவித்துள்ளது.

* * *

இந்தியா—பாகிஸ்தான், இவை இரண்டிற்கும் இடையே வர்த்தகப் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் எதிரொலிகளே, மேலே காட்டப்பட்டவையாகும்.

தென்னாட்டின் தொழில்களிலே மிகச் சிறந்ததும், வளப்பம் பொருந்தியதும், அகில உலகத் தொடர்பு கொண்டிருப்பதுமான தொழில், தோல் பதனிடும் தொழிலாகும். அந்தத்தொழில் பாக்கிஸ்தான் பகுதியோடு மிகத்தொடர்புகொண்டிருந்து வருகிறது என்பதும், பாக்கிஸ்தானோடு கொண்டிருக்கும் இந்த வர்த்தக உறவுமுறை எவ்வகையிலேனும் பாதிக்கப்படுமானால், அது தென்னாட்டுத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கே பேரிடியாக முடியும் என்பதும், அத்தகைய தொரு தாக்குதல் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது நிதி மதிப்பீடு காரணமாக என்பதும், தோழர் ஏ. பார்த்தசாரதி அவர்கள் கூற்றிலிருந்து இனிது விளங்குகின்றன.

அது போலவே, தென்னாட்டிலே, வளர்ந்துவரும் நிலையிலுள்ள நூலாலைகளும், இப்பொழுது, பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது, மில் சொந்தக்காரர்கள் சங்கத்தின் தந்தியிலிருந்து நன்கு புலனாகின்றது

பாக்கிஸ்தானோடு கொள்ளும் வர்த்தக உறவு முறையை நம்பிவாழும் இந்தப் பெரிய—சிறந்த—வளரக் கூடிய—பலனளிக்கக் கூடிய—இரண்டு தொழில்களும் இந்திய அரசாங்கம் கொண்டுள்ள கொள்கையினால் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்விரு தொழில்களும், தென்னாட்டில் பாதிக்கப்படுவதைப் போல, வட நாட்டில் பாதிக்கப் படுவதில்லை; பாதிக்கப்பட வேண்டிய அவசியமுமில்லை; பாதிக்கும் அளவுக்கு அங்கு வழியுமில்லை. தென்னாடு கொண்டிருப்பதைப் போன்ற ஏற்றுமதி—இறக்குமதி—உறவு முறையை வடநாடு, பாக்கிஸ்தானோடு கொண்டிருக்கவில்லை. ஆகவேதான், வட நாட்டுத் தொழில் துரைமார்களுக்குப் பாக்கிஸ்தானின வர்த்தக உறவு முறை எப்படி மாறினாலும், அதில் எப்படிப்பட்ட நெருக்கடி நேர்ந்தாலும் அதைப் பற்றிக் கவலை ஏற்படுவதில்லை.

வட நாட்டு முதலாளிமார்களின் அணைப்பில் இணைந்து செல்லும் இந்திய அரசாங்கம், வீம்பினை அடிப்படையாகக் கொண்டு, பாக்கிஸ்தானோடு முட்டி முரண்டிக்கொண்டு நிற்பதை, ஒரு விளையாட்டாகக் கருதி வருகிறது. அந்த வீம்பு விளையாட்டின் விபரீதப் போக்குகள், வட நாட்டின் தொழிலரசுகளுக்குப் பொழுதுபோக்காக இருக்கலாம், ஆனால் தென்னாட்டைப் பொறுத்தவரையில் வேதனையின் தாக்குதல்களாகவும், அழிவு பயப்பனவாகவுந்தான் இருந்துவருகின்றன.

இவ்வளவு தொல்லைகளும், நெருக்கடியும், வர்த்தகத் துறையிலும் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்து வருவது, தென்னாடு வடநாட்டோடு இணைந்திருப்பதேயாகும். வடநாட்டின் தொடர்பிலிருந்து, தென்னாடு—திராவிட நாடு துண்டிக்கப்பட்டுவிட்டால், திராவிடம் அயல்நாட்டு உறவு முறைகளில் தனிப் போக்கைக்கொள்ள ஏது ஏற்பட்டிருக்கும். வடநாட்டு மத்திய அரசாங்கம் செய்யும் தவறுகளுக்கும் — குற்றங் குறைகளுக்கும் வளைந்து, பணிந்து, படிந்து கொடுக்க வேண்டிய அவசியம் திராவிடத்திற்கு ஏற்பட்டிருக்காது திராவிடம் தனியே பிரிந்திருந்தால்,

தென்னாட்டின் முக்கிய தொழில்கள் இரண்டும் 'சாகாவரம்' வேண்டி, 'டில்லி தேவதைகளிடம்' மண்டியிட்டு, 'தவங்'கிடக்க வேண்டிய பரிதாபகரமான நிலையில்தான், தென்னாடு இன்று வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பரிதாப நிலையின் இரக்க ஒலிகள்தாம் மேலேகாட்டப்பட்ட இரண்டு குரல்களும்!

தென்னாடு, திராவிடம்—தனியே பிரிந்து தன்னாட்சிக் கொண்டிருந்தால், பாக்கிஸ்தானோடு நேரிடையாக, திராவிடத்திற்கேற்ற முறையில் வர்த்தக உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ள வழிவகை ஏற்பட்டிருக்கும். மேலும் டாலர் பகுதியோடவோ, ஸ்டெர்லிங் பகுதியோடவோ இணைந்திருக்காமல், பிற நாடுகளைப்போல் தனித்து வாழ்ந்து, உலக நாடுகளின் தொடர்புகளை ஏற்ற முறையில் கொண்டு, இன்ப வாழ்வு நடத்தியிருக்கலாம், பாக்கிஸ்தானைப்போல, ஸ்டெர்லிங் குறைப்பு மதிப்பீடுக்குக் கட்டுப்படாமலிருந்து, தனி வர்த்தக உறவு முறையை, எல்லா நாடுகளோடும் கொள்ள, திட்டம் தீட்டியிருக்கலாம்.

நூல் ஏற்றுமதி, பச்சைத் தோல் இறக்குமதி ஆகிய இவை நடைபெற, தென்னாட்டுக்கும் — பாக்கிஸ்தானுக்கும் இடையே திறந்திருந்த வழி, இந்திய அரசாங்க ஏற்பாட்டால், மூடப்பட்டுவிட்டதால், தென்னாட்டு மில்களும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளும், மூடு விழா நடத்தவேண்டிய நெருக்கடி நிலையை அடைந்துவிட்டதாக அபயக்குரல்கள் எழுப்பியுள்ளனர் இருவகையினரும்! என்ன செய்வது! தென்னாடு வடநாட்டோடு இணைந்திருக்கும் வரையிலும், இத்தகைய இன்னல்கள் ஏற்பட்டுதான் தீரும்! என்ன செய்வது!

சொல் வேறு செயல் வேறு

"ரூபாய் மதிப்புக் குறைவால் நாட்டில் பெரிய மாறுதல் ஒன்றும் நடந்துவிடவில்லை. விலைவாசிகள் உயர்ந்துவிடவில்லை. உயரமாட்டா. உயரவிட மாட்டோம்"

இவை பணப் பைகள், அரசாங்கப் பெருந்தலைகள் முதலியவற்றின் கூற்று. ஆனால், நாட்டிலே, மிளகு விலை விஷம்போல் ஏறுகிறது, உள்நாட்டு உணவுப் பொருள்களின் விலைகளோ நாளுக்கு நாள் ஏற்றத்தை அடைந்து வருகின்றன. சர்க்கரை ஸ்டாக் திருப்திகரமாயுள்ளது, என்று அரசாங்கம் கூறிய அடுத்த மூச்சில், சர்க்கரை கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டதெனப் பல ஊர்களிலிருந்து முறையீடுகள். சர்க்கரைப் பண்டங்களின் விலை ஏறிவிட்டன.

உள்நாட்டுப் பொருள்களின் நிலையே இதுவானால், ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அமெரிக்கச் சாமான்களோ, திடீரென மறைந்து இப்போது புதிய வேடத்தில் அதிக மதிப்புடன் வெளிவர துலவுகின்றன.

வாய்ப் பேச்சில் மாறுதல் இல்லாத் தலைவர்கள் மாளிகைக்குள்ளிருந்தபடியே, நாட்டிலும் மாறுதல் இல்லையென்று கூறிக்கொண்டிருப்பதைவிட, மக்கள் புழங்கும் கடைத் தெருவுக்கு வந்து நிலைமையை நேரில் அறிந்து செல்லலாமல்லவா? அப்படிச் செய்தால் உடனடியான பரிகாரத்திற்கு வகை செய்ய வேண்டிவருமே! அதனால் பேச்சுடன் எதனையும் நிறுத்திக் கொண்டால், மக்களையும் திருப்திப் படுத்திவிடலாம். பணக்கார வணிகர்களின் பகைமைக்கும் ஆளாகாமலிருக்கலாம் அல்லவா?

திராவிட முன்னேற்றக் கழகம் (10-வது வட்டம்)

28—9—49 புதன் மாலை 6-மணிக்கு, எண் 8 போர்ச்சுகீஸ் சாச் தெரு மாடியில், திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். இவ்வட்டக் கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

சத்தியவாணிமுத்து.

அடுப்பூதும் பெண்களாக ஆக்க ஏற்பாடு

பம்பாய் முதலமைச்சர் தோழர் பி. ஜி. கேர், பூனா பெண்கள் கல்லூரி ஒன்றில் பேசுகையில், "பெண்கள் தாய்மைத் தொழிலுக்கும் இல்லப் பணிக்குமே உரியவர்களாதலின், அதற்குத் தகுந்த கல்வியே அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தல் வேண்டுமென்று பேசியுள்ளார்.

இதுதான் காங்கிரஸ் ஆட்சி அமைக்க விருக்கும் தர்மராஜ்ய-இராமராஜ்ய 'சாம்பிள்.'

பெண்கள் மனத்தைப் பொதுக் கல்வியில் திருப்பிவிட்டு, அவர்களை உலக அறிவு பெறச் செய்வதைவிட, அடுப்பூதும் வழிக்கே பழைய சனாதன தர்மப்படி திருப்பிவிட்டுவிட்டால், சனாதனம் சரியாதல்லவா? பெண்கள் படித்துப் பகுத்தறிவு பெற்றுவிட்டால், சனாதனத்திற்குக் கொள்ளிதான். அறிவு வளரவளர ஆபாசங்கள் எவை? என்பதைப் பெண் மக்கள் உணர்ந்து கொண்டால், அவர்கள் வளர்க்கும் வருங்கால மனித சமுதாயம் பகுத்தறிவுப் பெற்றுப், பழைய சனாதன 'தர்மங்களுக்கு' ஆப்பறைந்து சவக்குழிக்கு அனுப்பிவிடு மல்லவா? அந்நிலை வராமல் பாதுகாத்துக் கொள்ளவே, சனாதனம் கேர் உருவத்தில் தோன்றி, பெண்களை "மாயை" உலகிற்கு அனுப்பிச் சிறையிடத் திட்டம் வகுத்து வேலை செய்கிறது!

இனி நடப்பவை

திருவத்திபுரம்:— வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழகச் செயற்குழு கூட்டம் 9-10-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு திருவத்திபுரத்தில் நடைபெறும்.

'ஜில்லா மாநாடு கூட்டும் விடயமாய் ஆலோசிக்க' வேண்டி, பத்துத் தோழர்கள் வேண்டி எழுதின 16-9-49 தேதியிட்ட ரிஜிஸ்தர் தபாலை ஆலோசித்தல்.

கழகத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை ஆலோசித்து, எதிர்காலத்தை நிர்ணயித்தல் ஆகிய இரண்டு பொருள்பற்றியும் முடிவு செய்யப்படும். எனத் தலைவர் சி. வே. சுப்பராயன் அறிவிக்கிறார்.

* * *

சென்னை-புரசைவாக்கம்-புரசைவாக்கத்தில் திராவிடமுன்னேற்றக் கழகம்அமைப்பதுபற்றி ஆலோசிக்க புரசை திராவிடத் தோழர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று 28—9—49 மாலை 7 மணிக்கு புரசைவாக்கம் பெரியசாலை 15-16 எண்ணுள்ள கட்டிட மேல் மாடியில் (பல்டாளு மேல்மாடி) நடைபெறும். கழக அன்பர்கள் அனைவரும் வருமாறு வேண்டப்படுகின்றனர்.

வல்லவனுக்கு ஒரு வல்லவன்

அமெரிக்காவை அலறச்செய்த அதிசயம்!

அணுக்குண்டைக்கண்டு பிடித்து ஜப்பானிய நகரில் இரக்கமற்று, வீசிநாசமுறச் செய்து, போரில் வெற்றி கண்டதனால் அகம்பாவம் பிடித்து, உலகநாடுகளை எள்ளளவும் பொருட்படுத்தாமல் உலகத்தையே தன்மார்க்கெட்டாக ஆக்கிக் கொள்ள எண்ணித்திட்ட மிட்ட அமெரிக்காவின் ஆசையில், ரஷ்யா அணுகுண்டைப் போட்டுவிட்டது.

அமெரிக்காவிடம் அணுக்குண்டிருப்பது போலத் தன்னிடமும் அணுக்குண்டு உண்டென்பதை—அணுக்குண்டுகளைச் செய்து குவிக்கும் மர்மம் தனக்கும் தெரியுமென்பதை—ரஷ்யா மேடைப் பேச்சு மூலமாக வன்று, வாய்ப் பேச்சில் வீரமொழிகள் கூறியன்று—செயலளவில் காட்டிவிட்டது. சோதனை செய்து அதில் வெற்றி பெற்றும் காட்டிவிட்டது. இதன் பலனாக, அமெரிக்காவின் உள்நாடித்துடிப்பு ஏற்பட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலமாகச் செய்யும் வேலையில் அது இறங்கியிருப்பதுடன், சர்வதேசச் சமாசத் திட்டம் வகுக்கவும் முனைகிறது.

உலக நாடுகளிடையே செருக்குடன் திரிந்த அமெரிக்காவை—மற்றொரு போர் மூளுமா என்றிருந்த நிலையை—ரஷ்யா தன்னிடமுள்ள அணுக்குண்டைக் காட்டியே அடக்கிவைக்கும் அளவுக்குக் கொண்டு வந்துவிட்டதென்னலாம்.

ஆனால், மற்றோர் போரோ, பெரிய உலக நெருக்கடியோ, வாராமல் தடுக்க இந்த அணுக்குண்டுகள் பயன் படுமானல், உலகப் பெரும் நாடுகள் அனைத்துமே அணுகுண்டுகள் பெற்று வாழட்டும். அழிவுக்கு அவை பயன் படுத்தப்படுமானால், மேற்கத்திய நாடுகளைப்பற்றிய பூகோளப் படத்தை மாற்றி எழுத வேண்டிய நிலைமை தோன்றுவது வியப்பூட்டுவதன்று.

'உணவு உற்பத்தியைப் பெருக்கும் இயக்கம் பலனற்றது"

உணவு அமைச்சர் அறிவிக்கும் விவரம்

"அதிக உணவு உற்பத்தி இக்கழகத்தின் மூலம் எதிர்பார்த்தப் பலன் எல்லாம் கிடைக்காமற் போய்விட்டாலும், சிறிதளவு இந்த இயக்கம் உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளித்திருக்கிறது"

என்று உணவுப்பகுதி அமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்திருப்பதன் மூலம், உண்மையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். ஆனால் இந்தப்பலன் கிடைக்காத முயற்சியில் அரசாங்கம் எவ்வளவு பணத்தைப் பாழாக்கியிருக்கிறது, என்ற புள்ளி விவரத்தை அவர் தெரிவிக்கவில்லை. அதுவும் தெரிந்தால் நம் நாட்டு உரிமையாட்சி, நாட்டு மக்களுடைய நலன்பற்றிக் கொண்டுள்ள கருத்து மிகுந்த வேலைத்திட்டம் எத்தகையதாயிருக்கிறதென்பதை மக்கள் உணர உதவியாயிருக்கும்.

உலகக்கூடம்

['சம்மட்டி']

"என்ன இருந்தாலும் நமக்கெல்லாம் கொஞ்சம்கூட சேவா உணர்ச்சி கிடையாது!" என்றார் சுகுமார்.

'என்ன பிரதர்! எதைப் பார்த்துவிட்டு, நம் அனைவரின் உழைப்பையும் குறைத்து மதிப்பிட்டு விடுகிறீர்கள்!' என்றேன் நான்.

'பின் என்ன பிரதர்! ஏதோ பகுத்தறிவு பிரசாரம் புரிகிறோம் என்று, நாமும்தான் தினம் தினம், 'கல்லிலும் செம்பிலும் கடவுள் இருக்க மாட்டார்! தேர் திரு விழாவிற்குக் காசைக் கொட்டியழாதே! மோட்ச நரகத்தில் நம்பிக்கைக் கொள்ளாதே! புரோகிதன் காலில் விழாதே! நீயும் மனிதன் என்பதை மறந்து விடாதே!' என்றெல்லாம் பேசி வருவதைத் தவிர, நாம் வேறு ஏதாவது உருப்படியான காரியம் செய்கிறோமா பிரதர்?' என்றார் சுகுமார்.

'முட்டாளாக இராதே. பகுத்தறிவை எதற்கும் துணைகொள் பாடுபட்டு உழைத்த காசை' உனக்குள்ள நித்தியத் தேவைக்குப்பயன்படுத்திக்கொள். பரமன் என்றும் பரமபதம் என்றும் நம்பி மோசம் போகாதே' என்று பேசுவதா, பிரதர், உருவான பலனளிக்காத பணி?' என்றேன் நான்.

'என்னமோ பிரதர்! நமது பிரசாரப் பணியில்பழுது இருப்பதாகவே எனக்குப் படுகிறது பிரதர்!' என்றார் சுகுமார்.

'இதோ பார் சுகுமார்'—நான் சொல்வதைக் கொஞ்சம் கருத்தாகக் கேள்! இரண்டாண்டுகளுக்கு முன், என் கழுத்தைப் பார்த்திருக்கிறீர்கள் —இன்றும் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள் — மாறுதல் தெரிகிறதல்லவா? எங்கே அந்த உத்திராக்கமணி இப்பொழுது? ஏன்? உங்கள் நெற்றியைத்தான் இப்போது எடுத்துக்கொள்ளுவோமே! இன்னும்கூட அந்த வெந்துப்போன வடு தெரிகிறதே பிரதர்! அந்த நாமம் போட்டுக்கொண்டு இருந்தபொழுது, என்னுடைய நெற்றியைக் கண்டாலே, தங்களுக்கு எவ்வளவு அருவருப்பும் ஆத்திரமும் இருந்தது? அன்று நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துவிட்டால், எவ்வளவு வெறுப்போடும் பகையுணர்ச்சியோடும் நடந்துகொள்ளுவோம், ஏதோ காதல் போட்டியில் பங்கு கொண்டிருப்பவர்கள் போல! அந்த நாளில் உங்கள் ஜாதி என்ன என்று கேட்பதும், என் ஜாதி என்ன என்று நீங்கள் கேட்பதும், இந்த இரண்டிலும் உயர்ந்தது எது மட்டம் எது என்றெல்லாம் வாதிட்டும் இருக்கிறோமே, அவைகளை எல்லாம் இன்று நாம் கனவில் கூட பேசுவது கிடையாதே பிரதர்! இந்தப் புரட்சி மனம், நமது அறிவியல் பணியின் விளைவல்லவா பிரதர்? இது நமது உழைப்பினால் ஏற்பட்ட உருவான பலனைத் தங்களுக்குப் படவில்லையா?' என்றேன் நான்.

'இதையெல்லாம் சொல்லவில்லையப்பா! நாம் இந்தக் காரியத்தைச் செய்யவில்லையென்றால், வேறு ஒருவருமே, இந்த நாட்டில், இதனைச் செய்ய முன்வரத் திருக்கமாட்டார்களப்பா! இது தான் நம்ம இருவருக்கும் காதலா மலகமாச்சே! இது அல்ல பிரதர் நான் சொல்ல வந்தது!' என்றார் சுகுமார்.

'பின் எதப்பா?'—என்றேன் நான்.

'ஏதாவது நாம், ஏழை மக்கள் படுகிற கஷ்டங்களிலே, கோடியாகக் கலந்து, அவர்களுடைய குறைகளைப் போக்க, முன்வர வேண்டும். என்ன, நான் சொல்வது உனக்குப் பிடிக்கிறதாக இருந்தால் சொல்லு, நாளையே, நாம் அதற்கான பணியை மேற்கொள்ளுவோம்!' என்றார் சுகுமார்.

'ஏதோ! உன் ஆசையை ஏன் நான் கெடுக்க வேண்டும். விஷயத்தை விளக்கமாகச் சொல்லு என்னால் முடிந்தவரையில் உன்னுடன் ஒத்துழைக்கிறேன்!' என்றேன் நான்.

'இந்த நாட்டில் எவ்வளவு ஏழை மக்கள் இருக்கிறார்கள் தெரியுமா?' என்றார் சுகுமார்.

'என்ன பிரதர்! ஏழை மக்களின் புள்ளி விபரம் தேடுகிறதற்குத்தான், நமக்கு சேவா உணர்ச்சி வேண்டுமென்று கவலைப்படுகிறாயோ?' என்றேன் நான்.

'அதற்குள் அவசரப்படுகிறாயே பிரதர்! நான் சொல்வதைக் கொஞ்சம் கருத்தாகக் கேளுங்கள் பிரதர்! ஏழைகள் எண்ணிக்கை வேண்டும். அவர்களுக்கெல்லாம் கட்டிக்கொள்ளப் போதுமான ஆடைகள் இருக்கிறதா என்று கட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்!' என்றார் சுகுமார்.

'எங்கப்பா! ஏதாவது பிர்லா கிர்லா, தங்கள் ஆலையில் தேங்கிக்கிடக்கிறதாகச் சொல்லப்படும் துணி மூட்டைகளை, உன்னிடம் கொடுத்து, ஏழைகளாகப் பார்த்து தானம் கினம், தாராளமாகச் செய்யச் சொன்னார்களா என்ன? கொஞ்சம் விளக்கமாக விவரமாகச் சொல்லப்பா சங்கதியை' என்றேன் நான்.

'அதெல்லாம் ஒன்றுமில்லை! நாம், காலையில் எழுந்து, ஒவ்வொரு வீடாக ஏறி ஏறி, ஏதாவது கட்டிக் கிழிந்தக் கந்தை இருக்கிறதா என்று, கேட்க வேண்டும். கெஞ்சிக் கூத்தாடி, ஏழைகளின் கஷ்டத்தை எடுத்துக் கூறி, கல் மனதையும் கரையச் செய்து, கட்டிக் கழித்த துணியை, தானமாகப் பெற வேண்டும்!' என்றார் சுகுமார்.

'ஏன் பிரதர்! கோயில் ஏணி திவட்டிகளுக்குச் சத்தவா?' என்றேன் நான்.

'என்ன பிரதர்! கையாண்டியா பேசுவது! இதற்குத்தான் பிரதர் நமக்குச் சேவா உணர்ச்சி தேவை என்று ஆரம்பத்திலேயே சொன்னது!' என்றான் சுகுமார்.

'சரி சரி! மேற்கொண்டு சொல்லுங்க! உங்கள் விசித்திரமான திட்டத்தை!' என்றேன் நான்.

'அப்படிவசூலாகிற ஆடைகளை எல்லாம் சேர்த்து மூட்டையாக எடுத்துக் கொண்டு போய், மாலையில் ஏழை மக்கள் அதிகமாக இருக்கிற சேரிகளில் மூட்டையை இறக்கி, ஆடை தேவையாக இருக்கிறவர்களுக்கெல்லாம், தாராளமாக தானம்செய்ய வேண்டியது! ஏன் பிரதர்! நல்ல முறையல்லவா பிரதர், இது!' என்றான் சுகுமார்.

'இது என்ன, இரவலா, சொந்த மூளைத் திறமா?' என்றேன் நான்.

'இல்லை பிரதர்! இந்த மாதிரி அருமையான திட்டம் வகுக்க நம்மால் எல்லாம் முடியக் கூடிய காரியமா? அதற்கான மூளை பலம் தான் நமக்கு எங்கிருந்துவரும்?' என்றார் சுகுமார்.

'பின் எங்கிருந்து, இந்த அரும்பெரும் திட்டத்தைக் கடன்வாங்கினீர்? பிர்லா பிளானு அல்லது இது பீபிள்ஸ் பிளானு? ஐந்து வருஷ திட்டமா? ஐம்பது வருஷ திட்டமா?' என்றேன் நான்.

'இது என்ன வாரம் தெரியுமா? காந்தி ஜெயந்தி வாரம் இது. இந்தப் புண்ய வாரத்தில், சென்னை காங்கிரஸ் சேவாதளத்தினர், வீடுவீடாகச் சென்று, கிழிந்த ஆடைகளை......!

'ஆயுதங்களை இரவல் கொடுத்ததே அமெரிக்கா, சென்றபோர்க் காலத்தில், அதுபோல் ஏதாவது இந்தக் கந்தலாடைப் பிச்சைக்கு நிபந்தனை உண்டா?' 'நீங்கள் எப்பவுமே, அவசரம் அவசரம் பிரதர்!'

'கிழிந்த ஆடைகளைப்பிச்சைக் கேட்டு வாங்கி, சேரியில் இருக்கிற மக்களுக்குப் பரிசாக வழங்கப்போவதாக, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி முடிவிற்கு வந்திருக்கும்செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். எனவே, எனக்கும் ஏதாவது செயலளவில் ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நினைப்பு வந்துவிட்டது' என்றார் சுகுமார்.

'அருமையான திட்டம்! உலகத்தில் வேறு எவராலும், இது வரையில் அமுலுக்குக் கொண்டு வராத அற்புதமான திட்டம். ஒரு செப்புக் காசும் செலவழிக்கத் தேவை இல்லை. ஏழை மக்களின் ஆடைப் பஞ்சத்தைப் போக்கிவிடக்கூடிய, திருப்திகரமான ஏற்பாடு. மார்க்ஸ் இதனைக் காணக் கொடுத்துவைக்கவில்லை! மாஸ்கோ, இந்த ஏற்பாட்டில் அவசியம் உடனடியாகக் கவனம் செலுத்தினால் நல்லது. அமெரிக்காவின் தொல்லைகள் பல, இந்த அதி அற்புத முறையால் அகன்றுவிடக்கூடும். இந்த திட்டத்தைத் தயாரித்த மூளை கொண்டவருக்கு, கண்டிப்பாக நோபல் பரிசு வழங்கியாக வேண்டும். இது எனது பெரும் விருப்பம்' என்றேன் நான்.

'அது சரி பிரதர்! உங்கள் விருப்பம் இருக்கட்டும்! பலர் கட்டிக் கழித்த கந்தல் ஆடைகளை, சேரி மக்கள் வாங்கிக் கொள்வார்களா?' என்று கேள்வியைப் போட்டார் சுகுமார்.

'ஓ! யோசிக்க வேண்டிய விஷயந்தான்! அவர்கள் அனைவரும் தன்மான உணர்ச்சி உடையவர்கள் ஆயிற்றே! அந்த ஆற்றல் மிக்கவர்களின் உழைப்பை வாரா உறிஞ்சுவதை நிறுத்துவதைவிட்டு விட்டு, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், கிழிந்த ஆடைகளை—அதுவும் பலரிடம் பிச்சை எடுத்த பன்னாடைகளை—அவர்களிடம் கொடுக்கலாம் என்று துணிவு கொள்வது, சேரி மக்களின் தன்மான உணர்ச்சியையே, வலிய வம்புக்கு இழுப்பதாகும்' என்றார் சுகுமார்.

'சுயராஜ்யமப்பா இது சுயராஜ்யம்! ஏழைகள்தானே சேரி மக்கள் என்று, இந்தத் திருமேனிகள், அவர்களைக் குறைத்து மதித்துக்கொண்டதுகள். கிட்ட நெருங்கிக் கந்தல் ஆடைகளை, அவர்களிடம் காட்டின பிறகல்லாவா தெரியும், காங்கிரஸ் சேவாதளத்தினருக்குக் கிடைக்கும் பரிசு!' என்றேன் நான்.

'வேண்டவே வேண்டாம் இந்த சேவா உணர்ச்சி நமக்கு! எண்ணெய் சீயக்காய் கொடுத்து சேவை செய்தாகிவிட்டது. இப்பொழுது பிச்சை எடுத்து, சேரி மக்களுக்குக் கந்தல் துணிவழங்கப்போகிறார்கள் காங்கிரஸ் கட்சியினர். அமைச்சர்களும் இந்த அரும்பணியில் ஈடுபட்டாலும் எவரும் ஆச்சரியம் கொள்ள மாட்டார்கள்! பிறர் கட்டிக் கழித்த ஆடைகளைக் காண நேரும் ஆதித்திராவிட மக்களின் மனம் என்ன பாடுபடும்? 'எங்கள் உழைப்பைப் பிறர் கொள்ளை கொண்டு, பெருமையோடு இருந்துகொண்டு, பாடுபடும் எங்களைப் பரிகாசம் செய்யும் முறையில் பலர் கட்டிக் கழித்த கந்தல் ஆடைகளை. தானமாகத் தந்திடும் நாடே, நீ நாசமாகப் போ' என்று சபிப்பர்! வெளியில் கேட்காது; உள்ளத்திலே கொந்தளிக்கும் இந்தச் சாபம்.'

அமெரிக்கக் குடியரசின் முன்னாள் தலைவர்

அமெரிக்கக் குடியரசின் முன்னாள் தலைவரும், இப்பொழுது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் தலைவர்களில் ஒரே ஒருவருமான தோழர் ஹெர்பர்ட் ஹூவர் தமது 75வது பிறந்தநாள் விழாவை அண்மையில் கொண்டாடினர்.

கழகம் அமைக்கவும்

திருச்செஙகோடு செப், 23—திருச்செங்கோடு தாலுக்கா திராவிட இயக்கத் தோழர்களுக்குப் பொதுக் குழு உறுப்பினரான தோழர் என். கே. பி. வேல் அவர்கள் தெரிவித்துக் கொள்வதாவது:—

"நாட்டு நிலைமையைச் சீர் தூக்கிப் பார்த்து, மத்திய திராவிட கழக நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் பெரும்பான்மையோர், சென்ற 17-9-49ந் தேதி சென்னையில் கூடி ஓர் நல்ல முடிவு கண்டு, திட்டம் செய்துள்ளார்கள். ஆகவே அவர்கள் செய்த அந்தநல்ல முடிவை ஏற்றும், 18-9-49ந் தேதி நடைபெற்ற திராவிட முன்னேற்றகழக அமைப்புக் குழுத் தீர்மானத்தை வரவேற்றும், அரசியல், பொருளியல், சமுதாயவியல் ஆகியவற்றில் திராவிட முன்னேற்றககழகம் கொண்டுள்ள குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டும் திருச்செங்கோடு தாலுக்காவில் ஆங்காங்கு திராவிட முன்னேற்றக் கழகங்களை அமைக்குமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 16-10-49க்குள் கழகங்களை அமைத்து விடும் பணியில் மும்முரமாக இறங்கி செயலாற்ற வேண்டுகிறேன். உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்கள் வந்து சேர்ந்ததும் உடன் அனுப்பிவைக்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகம்

உடுமலை, செப். 22—

சடந்த வெளியூர் "மாலைமணி"யில் கண்ட அறிக்கையின்படி இவ்வூரில் 21-9-'49-ம் நாள் கழக முக்கியஸ்தர்களும், அனுதாபிகளும் கூடி 'திராவிட முன்னேற்றக் கழகம், நிறுவுவதென முடிவு செய்யப்பட்டதுடன், கீழ்க்கண்டோரை தற்காலிக பொறுப்பாளர்களாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு நகரசபைத் தலைவர் தோழர் எம். எஸ். கனகராசு அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர் சி. வெஙகடாசலம்:—செயலாளர்; தோழர் இரா. தங்கவேலு துணைச்செயலாளர்; தோழர் எஸ். மாணிக்கம், பொருள் உறுப்பினர்; தோழர் ப. நாராயணன்; விளம்பர உறுப்பினர்.

பிறகு செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிதுமுடிந்தது. (ஒ. கி.)

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம்
ரூ. 5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

மானேஜர்

பாசிசப் பிடியில் பண்டிதர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்தவர் அந்தக்கருத்துரைகள, ங்கள செய்கைகளுக்குப் பாதக மானதாக இருந்தாலும், சாதக மானதாக இருந்தாலும், வேறு ழிவகையைக் கூறுவனவாக இருந்தாலும், அகமகிழ்ச்சியோடு இரு கை மேந்தி அதனை வர வேற்க முன்வர், ஆளவந்தார் ள் — மக்களாட்சி முறையின் மாண்பு தெரிந்திருந்தவர்களாக இருந்தால்!

மக்களை மதித்து நடக்கும் ண்பாடு மிகமிக முக்கியமாகத் தேவைப்படுகிறது, ஒரு நாட் ன் ஆட்சிப்பொறுப்பில அமரு றவர்களுக்கு. மக்களை மதிக் ம் மனவளம், ஏதோ குருட் டாம்போக்கில், நினைத்தமாத்திர த்தில் ஒருவரிடம் ஏற்பட்டுவிடக் டியதன்று எதிர்ப்புணர்ச்சிக் காண்டவர்களிடமும் இன் கம் காட்டும் சுபாவம், பல ள் பயிற்சிக்குப் பின்னரே க்கூடியதாகும். தங்களுக்குப் டிக்கமில்லாததாக இருந்தா ம், தாங்கள் பெற்றுள்ள தவியை முறைப்படி ஒழுங் ாகப் பறித்துக்கொள்ளப் பாடு டுகிறவர்களாக இருந்தாலும், வர்கள் கூறும் குற்றச்சாட்டு ளை — கண்டனங்களைப் — பாறுமையாகக் காதுகொடுத்து கேட்கும் வளமான நெஞ்சம் பற்றிருக்கவேண்டும், ஆளவந் ார்கள். அதிகாரம் வேறு தற்கோ பெற்றிருக்கிறோம், பணியிடவும்—அதனை மக்கள் முணுமுணுக்காமல் ஏற்று ப்பதைப் பார்த்துப் புளகாங் கம் கொள்ளவுமே, பதவி பெற் ருக்கிறோம் என்று, மக்களை திக்கத்தெரியாத, முன்பின் ிந்தறியாத, மனித உருவங் ்தான், மண்டை வீக்கம் காள்ளும்!

இப்படி வரலாற்றிலே பல ம்பவங்கள் உண்டு, ஊராள ந்தவன், மக்களின் பிறப்புரி மகளைக் காலில்போட்டு நசுக்கி சம்செய்து, நாசமடைந்தநிகழ் சிகள். ஆனால், காலவேறுபாடு, நத்திலே களங்கத்தைக்கொள் ச்செய்தது, அந்தமதோன்மத் களான முடிதாங்கிகளுக்கு. க்களைமந்தைகளாகவும், அரியா ாத்தை ஆடுமேய்ப்பவனின் சனமாகவும கொண்டு, காடுமை புரிந்தனர் கொடுங் காலர்கள். விழிப்புணர்ச்சி பற்ற மக்களின் உரிமை வேட் கை, திரண்டு உருண்டு, அந்த ந்தாகளின் உயிரைக் குடித் பதவியைப் பறித்து, டு கடத்திப், பின் சந்ததி ளருக்கு அரும்பெரும் படிப் ினையைவிட்டுச் சென்றிருக் றது. இந்த வரலாறு கூறும் ாதனையைத் திரும்பத் திரும் ப பலமுறை மனப்பாடம் சய்தாகவேண்டும், ஆளவந்தார் ள், அவர்கள் எவ்வளவு தியா ம் புரிந்தவர்களாக இருந்தா ம் சரி! பிரிட்டனின் பொரு ாதார மந்திரி சர் ஸ்டாபோர்ட் கிரிப்சுக்கு, ஸ்டர்லிங்கின் மதிப் பக் குறைத்ததின் பலனாக, திர்ப்பு-எதிர்க் கட்சியிலிருந்து ம்என்பதில்லாமல்-சொந்த தொழில்கட்சியிலிருந்தும்கூட ளம்புகிறது. எதிர்ப்பைக்கண்டு ிச்சல்கொள்ளவில்லை கிரிப்ஸ். மலர்ச்சியோடு வரவேற் ார். என்ன பொருள் இதற்கு? ளை-தன்னிடம் ஆளும் ொறுப்பை அளித்துள்ள மக் ளை-மதித்து நடக்கிறார், மக்க ட்சி முறைக்கு மாண்பு தேடி கிறார் கிரிப்ஸ் என்று பொருள்.

தனது செயலிலுள்ள சாதக பாதகங்களை எடுத்துக் கூறினவர் களைக், கிண்டல் செய்யவில்லை—கேலி பேசவில்லை—அஞ்சலி செய்து அவர்களின் அறிவுரை களுக்கு நல்வரவு கூறுகிறார் நாடாளத் தெரிந்த கிரிப்ஸ்—மக்களாட்சி முறையில் தோந்த பயிற்சி பெற்றுள்ள காரணத் தால்.

"இவர்கள் கருத்துகளைக் கேடகஉலகம்என்ன வேட்கை கொண்டா இருக்கிறது? இவர் கள யார் இது பற்றி எல்லாம் பேச? எனககல்லவோ அந்த உரிமை இருக்கிறது?"

கிரிப்சின் எந்த ஒரு வார்த்தை களிலும், இந்த ஆணவப் போக்கு, ஆதிக்க உணர்ச்சி, பாசிசவெறி, படிந்திருக்கவில்லை; அதன் நிழல்கூடப் பட்டிருக்க வில்லை. பாராளத் தெரிந்தவர்—அதற்கான பயிற்சி பெற்றிருப்ப வர்—காங்கிரஸ் தலைவர்களைப் போல காடு மேடு சுற்றித்திரிந்து ஏதோ எதிர்பாராது இருந்த நிலையில்—ஆளும் பொறுப்பான இடத்திற்கு உயர்த்தப் பட்டவர் அல்ல பிரிட்டிஷ் அமைச்சர் சர் கிரிப்ஸ் எனவே, பொறுப் புணர்ந்து பேசப் பழகியுள்ளார்—மக்களை மதித்து நடக்கக் கற்றுள்ளார்—மற்றவர் வாயுரை கண்டு வெகுளாத மனவளம் பெற்றுள்ளார், அவர். அவர் வெறும் வாய்ப்பறை (Demogague) வீரரல்ல — அரசியல் (Statesman & Able Administrator) முறைமையும் ஆளும் திறமும் அனுபவ வாயிலாக அறிந்தவர் கிரிப்ஸ்.

பண்டிதர் கூறுகிறார்—இல்லை—கேலி பேசுகிறார், கையாண்டி செய்கிறார், ரூபாயின் மதிப்பைக் குறைத்தது குறித்து எழுந்த பலரின் கருத்துரை கண்டு! 'ஆமாம்!' பண்பாடு வேண்டு கிறார் பண்டிதர்! அது பாசிசப் பாதைக்கு இட்டுச் செல்லும்; மக்களாட்சி முறையினைக்கொலை செய்யத் தூண்டும் முடிவில்! 'மனிதருள் மாணிக்கம்' என்று புகழப்படுகிற நற்பேறு பெற் றுள்ள பண்டிதர், பாசிச நோயின் மூர்க்கப்பிடியிலிருந்து தப்ப முயல வேண்டும். அந்த நோயுக்கு இடம் கொடுத்து விட்டதின் விளைவுதான், பல, திறப்பட்ட கருத்துரைகளைக் கண்டு,

'ஏதோ உலகம் இவர்கள் அபிப்பிராயங்களை அறிய வேட்கை கொண்டிருந்தது போல், நினைத்துக் கொண்டு, சில பல கூற முனைக்கிறார் களே!'

என்ற தன்முனைப்பு வாச கத்தை வீச வேண்டியதாயிற்று. பல நாள் பயிற்சி—எதிர்த்துப் பேசாத நிலையிலேயே ஏற்றம் பெற்று விட்டவர் பண்டிதர்! இன்று புதிதாக, தனது செய லுக்கு மாற்றம் பிறப்பது கண்ட டதும், இருதயம் கொஞ்சம் துரிதமாகத் துடிக்க ஆரம்பிக் கிறது! அவ்வளவுதான்! நல்ல மருத்துவம் தேவை—மக்கள் தான் அதற்குத் தகுதி வாய்ந்த மருத்துவர்கள்!

ஹிந்து மதக் கலாசாரத்திலே கட்டுண்டு கிடக்கும் கணவன், பள்ளியிலே போதிக்கும் ஆரம்ப ஆசிரியன் யாராலும்பதவிபிராந்த மானது என்ற நினைப்பில் உள்ள கோல்தாங்கி, முன்நாள் பயிற்சி யின் விளைவாகக், கொஞ்சம் பாசிச நோயுக்கு பலியாவது இயற்கைக்கு எதிரானதல்ல. பாதிக்கப்படும் மக்களின் விழிப் புணர்ச்சியால்தான், இந்த நோயைத் தடுத்து நிறுத்த முடி யும்.

மற்றவர் கூறும் கருத்துக்களை நக்கல் செய்த பண்டிதர், அதி கார முனைப்பு மறைந்து, மீண் டும் மககளாட்சி நினைப்பு தோன் றியதும், 'பலப்பலக் கருத்துக் கள் நடமாடுவது நல்லதுதான்' என்று, முதலில் கிளம்பிய பாசி சப் பண்பாட்டிற்குப், பட் டாடை போர்த்து மூடும் பணி யில ஈடுபடுகிறார். பண்டிதர் நல்ல வர்தான்! அவர் என்னசெய்வார் இந்த மனப் போராட்டத்திற்கு! அதிகாரம், அதிக போதை தரும் வல்லமையாயிற்றே!

ஆசிரியருக்கு முடங்கல்

ஆதரவாளர் 'நாணயம்'

அன்புள்ள ஐயா!

"விடுதலை" வெளியூர் 24-9-49 பத்திரிகையில் வெளிவந்த செய்தி யில், "மாயவரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் R. பழனிச்சாமி அவர்களுக்கு சென்ற 24-7-49ல் யில் முதல் தீர்மானத்தை அன்னு ருக்கு அறிவிக்கப்பட்டபடி நாளது வரையில் நடந்துகொள்ளாததால், அவர்மீது நம்பிக்கை இல்லை என்று கமிட்டி மேற்படியாரை திராவிடர் கழகத் தலைவர் பதவியிலிருந்தும், கமிட்டி உறுப்பாளர் பதவியிலிருந் தும விலக்கிவிட ஒரு மனதாக தீர் மானிக்கிறது" என்று வெளியாகி இருக்கிறது. நான் சென்ற 22-7-49 உயில் டை திராவிடர் கழகத்தி லிருந்து விலகிக்கொள்வதாக, பத் திரிகைக்கு செய்தி (தினத்தூது) அனுப்பியதுடன் டை மாயவரம் திராவிடர் கழகத்திற்கும், எனது ராஜிநாமாவை அனுப்பினேன், 24-7-49ல் கமிட்டிக கூட்டத்தில் என்னுடைய ராஜிநாமாவை மீண் டும புனராலோசனை செய்யும்படி யும், கமிட்டி முடிவு தெரியுமுன்பு பத்திரிகைகளுககு செய்தி அனுப் பியவிபரத்திறகு வருந்துவதாகவும், தீர்மானம நிறைவேற்றப்பட்டு 1-8-49உககுள் பதில் தெரிவிக்கும படி கேட்டுக்கொண்டது, எனககு 3-8-49ல் மாலை கிடைத்தது. என் கைவசம் இருந்த திராவிடர் கழகக் கட்டிட நிதி ரூபாய் 895-4-0 வையும், கமிட்டித தீர்மானப்படி சித்தர்காடு K. ராமய்யா அவர்க ளிடம் கொடுத்துவிட்டு, கட்டிட நிதி செயலாளரிடம் என்னுடைய ராஜிநாமாவையும் கொடுத்திருக்க பெரியார் ஆதரிப்பு கோஷ்டியினர், என்மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானித்திருப்பதாக வெளியிட்டி ருப்பது, சேர்மைக்கும் நாணயத்திற் கும தவறானதாகும். பொதுமககள் என்னைத் தவறாக நினைக்கும்படி செய்யப்படும் ஒரு சூழ்ச்சியாகும். பெரியார், ஆதரிப்பு கோஷ்டியினர் செய்யும தப்புப் பிரசாரஙகளில் இதுவும் ஒன்றாகும். பொதுமக்கள், உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே இதை எழுதினேன். மேலும் என்னைக் குறித்து தவறாக எழுதியவர்கள், "பகுத்தறிவு கழகம்" என்ற பெய ரால் வாசகசாலை நிதிக்கு என்று நாடகம் நடத்தி, வசூலாகிய தொகையை எவ்வித கணக்கு இன்றி கையாடல் செய்தவர்கள் என்பதை மாயவரம் தோழர்கள் அறிந்ததே என்றாலும், மீண்டும் நான் நினை வூட்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள

ஆர். பழனிசசாமி

மாயவரம். 24-9-49

"மதுரை மன்னன்" தோற்றம்

மதுரை, செப். 18—

இவ்வூர் தோழர். ஆ. மாணிக்கம் அவர்களின் துணைவியார் தோழி யர் ஜோதி மணி அம்மையாருக்கு இன்று பிறந்த ஆண் மகவுக்கு "மதுரை மன்னன்" எனப் பெய ரிடப் பட்டது. இதன் நினைவாக திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு ரூபாய் ஒன்றும், "மாலை மணி"க்கு ரூபாய் ஒன்றும் வரப் பெற்றோம். மகிழ்ச்சி! (ஆர்.)

திராவிட முன்னேற்றக் கழகம்

-ஆனைமலை கிளை

ஆனைமலை, செப். 24—

23-9-49 வெள்ளியன்று மாலை 5 மணிக்கு தமிழன் வாசனைப் பாக்கு கம்பனி அறையில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், தஙகளை உறுப்பினாகளாகப் பதிவு செய்துகொண்டு ஆனைமலைக் கிளைக் கழகத்தை அமைத்தார்கள். கீழ்க் கண்டபடி நிர்வாகக் குழுவினா தேர்ந்தெடுக்கப்பட்டனர்

செயலாளர்:-ஏ. வி. எம். சாமி துணைச்செயலாளர்-ஏ. எஸ். வெஙகடாசலம். பொருள் உறுப்பினா. ஏ.ஆர். தஙகம். நிர்வாககுழு உறுப் பினர்கள்:-ஏ. ஜி. வெஙகிடுகிருஷ்ணன், ஏ. ஆர். வீரவாகு, ஏ.வி. நாராயணசாமி, ஏ. எஸ். அனீபா, எஸ். நாராயணசாமி, கு.நரசிம்மன். ஏ. எஸ். நரசிம்மன், டி. ஞானம், ஏ. புருஷோத்தமன். ஏ எஸ. லட்சுமணன், ஏ. எம் ஆறுமுகம், ஏ ஜி ஜெயராம், ஏ. ஜி வெஙகட்டராம. என். கோவிந்தராஜு எஸ் மாணிக் கம், எஸ். குப்புசாமி

செயலாளா நன்றிகூற கூட்டம இனிது முடிந்தது எனத்தோழா ஏ. வி. எம். சாமி எழுதுகிறா.

திராவிட வாலிபர் முன்னேற்றக் கழகம்

சேரனமாதேவி

சேரன்மாதேவி. செப். 23—

இக்கழகத்தின் அவசரக்கமிட்டிக் கூட்டம் 23-9-49 வெள்ளியன்று காலை 8-மணிக்குக் கழகக் கட்டிடத் தில், கழகததலைவர் தோழர் எம். எம். காதா தலைமையில் கூடி, ஏக மனதாக மூன்று தீர்மானஙகளை நிறைவேற்றிற்று.

கழக முக்கியஸ்தர்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றுவது என்று தீமானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பெரியாரின் பொருந்தாத் திரும ணத்தைக் கண்டித்தும், அவர் தலை மையின் கீழ் பணியாற்றுவதற் கில்லை என்று தெரிவித்தும் மேலும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன.

எனச் செயலாளர் தோழர் சு. ரத்தினம் அவர்கள் எழுதுகிறார் கள்.

தி. மு. கழகக் கொடிகள்

திருத்துறைப்பூண்டி தோழர்க ளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகள் கீழ்க்கண்ட இடத் தில் இலவசமாகத் தைத்துக் கொடுக்கபபடும்.

முகவரி:—K. J. S. தாவுத்.

தையல் நிலயம்,

திருத்துறைப்பூண்டி.

அண்ணா அறிவுமன்றம்

மேலசசின்னணம்பட்டி,

செப். 23—

மேலச் சின்னணம்பட்டியில் தோழர் வே. சுப்பிரமணியம் அவர் களைப் பொறுப்பாளராகக்கொண்ட, அண்ணா அறிவுமன்றம் என்ற பெய ரில் அறிவு மன்றம ஒன்று திறக் கப்பட்டது. அதன் நினைவாக மாலை மணிக்கு ரூ. 1-0-0 நன்கொடை அளிக்கப்பட்டது. (ஓ.சி.) ரூ. 1-0-0 வரப்பெற்றோம். மகிழ்ச்சி! (ஆர்)

திருவாங்கூர் தீட்டும் திட்டம் சென்னைக்கு ஏற்காதோ!

வைக்கம் தாலுக்காவில் (திருவாங்கூர்) நிலச்சொந்தக்காரர் களும் குடியானவர்களும், பயிரிடா மல் விட்டுவைத்திருக்கும் 2000 ஏக் கர் நிலஙகளை அரசாஙகத்திடம் ஒப் படைத்துவிடவேண்டுமென்று, திரு வாஙகூர அரசாஙகம் உத்தரவு பிறப்பித்து விட்டது. சென்னை அர சாஙகம் இதைப்பார்த்துக்கொண்டு தானிருக்கிறது. தானும் இது போலச் செய்யத்துணிந்தால் பல் லாயிரம் ஏக்கர் நிலஙகளை அரசாங் கம் பெறக்கூடும். அரசாஙகமே இவற்றில் பயிரிட்டால் பெருவாரி யான உணவுத்தானியஙகளை விளை யச்செய்யலாம்; பஞ்சததை ஓரளவு விரட்டலாம். ஆனால், சென்னை அரசாஙகத்திற்குத துணிவு!

திராவிட முன்னேற்றக் கழகம்

க புதுபபட்டி-கிளை

க. புதுப்பட்டி, செ. 24—

க. புதுப்பட்டி திராவிட முன னேற்றககழகத்தின கூட்டம 23-9-49ம நாள மாலை 8 மணிக்கு நடைபெறறது. தோழா எஸ். முகம்மது மீரு தலைமை வகித்தார். முன்பு அறிவிககபபட்ட செயற குழுவில் சிறிது மாறறம செய்யப பட்டு, திருத்தி அமைககப்பட்டது. செயலாளா:—ஆர்.கே.கே சாமி; துணைச் செயலாளா -நபி தாசன; நிதி உறுப்பினர்—பி முசதுசனி; விளமபர உறுப்பினா-எம. ரத தினம; செயலாளா நனறி கூற கூட்டம இனிது முடிநதது என விளமபர உறுப்பினா அறிவிககிறா.

புது மனை புகுவிழா

பாண்டவர் மஙகலம் (கோவில் பட்டி) செப். 14—

இவ்வூரில் தோழர் ஞானமுத்து—சேது பாண்டியன் அவர்களால் புதிதாகக் கட்டப்பட்டிருககும் இல் லத்தில் புது மனை புகு விழா நடைபெறறது. டை இல்லத்திற்கு "நடிகவேள் இராதா இலலம்" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒனறு வரப் பெற்றோம் மகிழ்சசி! (ஆர்.)

திருமணம்

கொளத்தூர், செப். 20—

இவ்வூர் தோழர் கி. அனந்த ராசுககும, தோழியர் சுந்தரம அம்மையாருக்கும சிறப்பாகத் திரு மணம் நடந்தேறியது. தோழா கள்:— கு. சதாசிவம, செ. குரு சாமி, நா. வையாபுரி மறறும் பலா வாழ்த்துரை வழஙகினர். இதன நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். மகிழ்சசி! (ஆர்.)

அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுககப பட்டிருககும உறுப்பினர்கள தங்கள் தங கள முகவரிகளைத் தெரிவிக்கக் கோருகிறேன.

பொதுச் செயலாளர்,

திராவிட முன்னேற்றக் கழகம்.

தலைமை நிலையம,

7, பவழககாரத் தெரு, சென்னை-1.

நாளை!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின ஆங்கிலப் பேர வைக கூட்டததில், தோழா சி. என். அண்ணாத்துரை, ஆற் றிய சொற்பொழிவின் சுருக கம நாளை வெளிவரும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.